மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று (03.03.2025) பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம் வார்டு170க்கு உட்பட்ட துலுக்கானத்தம்மன் கோவில் தெருவில் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி ரூ.62 இலட்சம் மதிப்பின் கீழ் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு மைய கட்டடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மண்டலக்குழுத் தலைவர் ஆர். துரைராஜ், மாமன்ற உறுப்பினர் கே.ஆர். கதிர்முருகன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (3.3.2025) சென்னை, கொளத்தூர் பேப்பர் மில்ஸ் சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் ரூ.27 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் ராஜா தோட்டம் 162 புதிய குடியிருப்புகளின் இறுதி கட்டப் பணிகள் குறித்து இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜே.பிரவீன் குமார், கொளத்தூர் காவல் ஆணையாளர் இரா.பாண்டியராஜன், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார். தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைமைப் பொறியாளர் கிருஷ்ணசாமி, கண்காணிப்புப் பொறியாளர் இளம்பரிதி, மாநகராட்சி மண்டல அலுவலர் ஏ.எஸ்.முருகன் செயற்பொறியாளர் செந்தில்நாதன், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஐசிஎப்.முரளிதரன், சந்துரு, மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் நாகராஜன், திருமதி.அமுதா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

தமிழ்நாடு மீனவர்களுக்கு இலங்கை கடற்படையால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு!

வெளியுறவுத் துறை அமைச்சரை – மீனவர் சங்கப் பிரதிநிதிகளுடன் எம்.பி.க்கள் சந்தித்து வலியுறுத்துவர்!

இலங்கை கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்ட விசைப்படகு உரிமையாளர்கள் நிவாரணத் தொகை ரூ. 8 லட்சமாக உயர்வு! இலங்கைச் சிறையில் வாடும் மீனவக் குடும்பங்களுக்கு தின உதவித் தொகை ரூ.500 ரூபாயாக உயர்வு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

நாகை,மார்ச்.4-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இலங்கை கடற்படையால் பறிமுதல் செய்யப் பட்ட விசைப்படகு உரிமையாளர்க ளுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை ரூ.6 இலட்சம் என்பது ரூ.8 இலட்சம் ஆக உயர்த்தியும் - இலங்கை சிறையில் வாடும் மீனவ குடும்பங்களுக்கு வழங்கப் படும் தின உதவி தொகை 350 ரூபாய் என்பதை 500 ரூபாயாக உயர்த்தியும் வழங்கிட உத்தரவிட் டுள்ளார்.

மேலும் தமிழ்நாடு மீனவர் களுக்கு இலங்கை கடற்படையால் ஏற்படும் பிரச்சனைகளுக்கு நிரந்த ரத் தீர்வு காண வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்களை தமிழ்நாடு பாராளுமன்ற உறுப்பினர்கள் மற் றும் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் அடங்கிய குழு நேரில் சந்தித்து வலியுறுத்திட தமிழ்நாடு பாராளு மன்ற உறுப்பினர்களுக்கு அறி வுரை வழங்கியுள்ளார்.

அதன் விவரம் வருமாறு:-

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து கைது செய்யப்படும் நிகழ்வு குறித் தும், அவர்களது படகுகள் பறிமு தல் செய்யப்படுவதும் குறித்தும், இதனால் மீனவர்களுக்கு ஏற்படும் இன்னல்களுக்கு நிரந்தர தீர்வு காணவும், கைது செய்யப்பட் டுள்ள மீனவர்களையும் கைப்பற் றப்பட்டுள்ள மீன்பிடி படகுகளை யும் மீட்டுத்தர உரிய நடவடிக்கை மேற்கொள்ளாத ஒன்றிய அரசை கண்டித்தும், இப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண வலியுறுத்தி இராமநாதபுரம் மாவட்டம் இரா மேஸ்வரத்தை சேர்ந்த பல்வேறு மீனவர் சங்கங்கள் 28.02.2025 அன்று முதல் தொடர் போராட்டத் தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து, முதல மைச்சர் அவர்களின் அறிவுறுத்த லின்பேரில், கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளம் - மீனவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் நேற்று (03.03.2025) இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் சென்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மீன வர் சங்க பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்கள்.

இப்பேச்சுவார்த்தையின்போது, தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து கைது செய்யப்படும் நிகழ்வு குறித் தும், அவர்களது படகுகள் பறிமு தல் செய்யப்படுவதும் குறித்தும், இதனால் அவர்களுக்கு ஏற்படும் இன்னல்கள் குறித்து எடுத்துரைத் தும், தங்களது கோரிக்கைகளை ஒன்றிய அரசிடம் வலியுறுத்தி, நிறைவேற்றி தருமாறு மீனவர் சங்க பிரதிநிதிகள் கேட்டுக் கொண் டனர்.

இந்நிலையில், முதலமைச்சர் அவர்கள் இன்று (03.03.2025) நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஆய்வு மேற்கொண்ட போது அப்ப குதியில் உள்ள மீனவர் சங்கங்க ளின் பிரதிநிதிகளை சந்தித்து அவர் களுடன் கலந்துரையாடி அவர் களின் கோரிக்கைகளை கேட்ட றிந்தார்கள்.

கடந்த 18.02.2025 அன்று இராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த மீனவ பிரதிநிதிகளுடனான சந்திப்பின் அடிப்படையில், அம்மா வட்ட மீனவர்களின் முக்கிய கோரிக்கைகளான தங்கச்சிமடம் மீன்இறங்கு தளம் மீன்பிடித்துறை முகமாக தரம் உயர்த்துதல், குந் துக்கல் மீன் இறங்கு தளத்தை தூண்டில் வளைவுடன் மேம்படுத் துதல் மற்றும் பாம்பன் வடக்கு மீனவ கிராமத்தில் தூண்டில் வளைவு அமைத்தல் ஆகிய திட்ட செயல்பாட்டிற்கு ரூ.360 கோடி யினை ஒதுக்கீடு செய்து பணி களை மேற்கொள்ள முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே ஆணையிட் டுள்ளார்கள்.

இராமநாதபுரம் மற்றும் நாகப் பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர் சங்கப் பிரதிநிதிகள் அளித்த கோரிக்கைகளை பரிவு டன் பரிசீலித்து, இலங்கை கடற்ப டையினரால் பறிமுதல் செய்யப் பட்டபடகுகளின் உரிமையாளர்கள் நலன் கருதி, இலங்கையில் நெடுங்காலமாக மீட்க இயலாத நிலையில் உள்ள மீன்பிடி விசைப் படகுகளுக்கு தற்போது வழங்கப் பட்டு வரும் நிவாரண தொகை யினை ரூ.6 இலட்சத்திலிருந்து ரூ.8 இலட்சமாக உயர்த்தி வழங்க முதலமைச்சர் அவர்கள் ஆணை யிட்டுள்ளார்கள்.

மேலும், இலங்கை கடற்படை யினரால் கைது செய்யப்பட்டு அங்கு சிறையில் இருக்கும் மீன வர்களின் குடும்பங்களுக்கு தின உதவி தொகையாக தற்போது நாளொன்றுக்கு 350 ரூபாய் வழங்கப்பட்டு வரும் நிலையில், அவர்களது குடும்பங்களின் வாழ் வாதாரத்தினை பாதுகாத்திட தின உதவித் தொகையினை நாளொன் றுக்கு 500 ரூபாயாக உயர்த்தி வழங்கிடவும் தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் ஆணையிட் டுள்ளார்கள்.

இலங்கை கடற்படையால் தமி ழக மீனவர்கள் கைது செய்யப்ப டும் நிகழ்வுகள் கடந்த இரண்டு ஆண்டுகளில் அதிகளவில் நடை பெறுவதுடன் அவர்கள் மீது சிறை தண்டனை விதிக்கப்படுவதால் மீனவர்களின் வாழ்வாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட் டுள்ளது. எனவே, அவர் களை உடனுக்குடன் விடுவிப்பது மற்றும் பறி முதல் செய்யப்பட்ட மீன் பிடி படகுகளை மீட்டு தாய கம் கொண்டு வருவதை து ரி த ப் ப டு த் தி டு ம் பொருட்டு, தமிழ்நாட் டைச் சேர்ந்த பாராளு மன்ற உறுப்பினர்கள், கால்நடை பராமரிப்பு மற் றும் மீன்வளம் - மீனவர் நலத்துறை அமைச்சர், அலுவல்சாரா உறுப்பி னர்கள் மற்றும் மீனவ சங்கப் பிரதிநிதிகள் அடங்கி யகுழு, விரைவில் ஒன் றிய வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து இப்பிரச்ச னைக்கு நிரந்தரத் தீர்வு காண வலியுறுத்துமாறு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தி யுள்ளார்கள்.

தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் அவர்களின் 72 வது பிறந்தநாளை முன்னிட்டு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி, துறைமுகம் மேற்குப் பகுதி, 57 வது வட்டத்தில் வட்டச் செயலாளர் ஜி.ராமமூர்த்தி தலைமையில் பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.முரளி நிகழ்வின் போது கழகத் தலைவர் அவர்கள் அறிவித்த உறுதிமொழி ஏற்றுக் கொண்டு கழகக் கொடி ஏற்றி பொதுமக்களுக்கு அறுசுவை உணவினை வழங்கினார். இதில் பி.கருணா, டி.கே.கலைவாணன், கே.முத்து, எம்.சரவணன், எஸ்.பச்சைமுத்து, வி.ஸ்டாலின், டி.அலெக்ஸ்பாண்டின், இ.சுரேஷ், எஸ். முகேஷ், ஆர்.சுரேஷ், ஜி.வெங்கடேசன், எம்.பிரபாகரன், எம்.தமிழரசன், ஏ.ராமச்சந்திரன், பி.கே. சரவணன், ஏ.நாகராஜ், ஸ்டில்ஸ் எம்.சி.வினோத், வி.இளங்கோவன், கே.இளவழகன், ஏ.பசுபதி, எம். செந்தில், இ.வினோத், என்.அடுக்குமல்லி, பிரபாவதி, கோமளா, நேரு, புஷ்பா, எஸ்.பிரீத்தி, எம். பாஸ்கர், எம்.சரத், பி.சுமன், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் பி.கே.சேகர்பாபு – முன்னிலை! எம்.கமல் தலைமையில்

அம்பத்தூர் வடக்குப் பகுதி தி.மு.க. சார்பில் மாபெரும் புகழரங்கம்!

வழக்கறிஞர் அ. அருள்மொழி –வே.மதிமாறன் – இந்திரகுமார் தேரடி – முனைவர் மஞ்சுளா சிறப்புரை!

சென்னை, மார்ச் 4

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், கழக தலை வர் 72-வது பிறந்தநாள் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு - அம்பத் தூர் வடக்கு பகுதி சார்பாக, மாபெரும் புகழரங்கம் திராவி டர் கழக பிரச்சார குழு செய லாளர்வழக்கறிஞர் அ. அருள் மொழி, பெரியார் எழுத்தாளர் வே.மதிமாறன், ஊடகவியலா ளர் இந்திரகுமார் தேரடி, முனைவர் மஞ்சுளா ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மக்கள் முதல் வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் 13, பொது வாழ்வில் நேர்மையான வர்! புதுவாழ்வின் விடியலான வர் எனும் தலைப்பில் அம்பத் தூர் வடக்கு பகுதி பகுதியில் மாபெரும் புகழரங்கம் நாளை (05.03.2025 புதன்) மாலை 6.00 மணியளவில், சென்னை, அத்திப்பட்டு, ஐ.சி.எப். கால னியில் நடைபெறுகிறது.

இப்புகழரங்கத்தில் 86வது வட்ட கழக செயலாளர் எம். கமல் எம்.சி, தலைமை வகிக்கி றார். கழகப் பொருளாளர் - கழக நாடாளுமன்றக் குழுத்த லைவர் டி.ஆர்.பாலு எம்.பி, சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் பி.கே.சேகர் பாபு, ஜோசப்சாமுவேல் எம். எல்.ஏ, பி.கே.மூர்த்தி எம்.சி, டி.எஸ்.பி.இராஜகோபால் எம். சி, எம்.டி.ஆர்.நாகராஜ், வி. ரமேஷ்(எ) நீலகண்டன் எம்.சி, டாக்டர்.ஜி.சாந்தகுமாரி எம். சி, எல்.பி.எப்.மோகன், டாக் டர் ஏ.பி.பூர்ணிமா எம்.சி, ஜி.வி.நாகவள்ளி எம்.சி, து. ஆயிரம், கு.கிருஷ்ணமூர்த்தி, ஜெ.பாலமுருகன், பி.வி. மூர்த்தி, கோ.சேகர்லால், ஆர். செல்வம், வி.பி.ரவிவந்திரன் வி.ராமு, மரிய கலைச்செல் வன், அன்புவேலுச்சாமி, டாக் டர்.ஜெய்லான்ஸ், எம்.வி. தமிழ்செல்வன், பி.பாலாஜி முன்னிலை வகிக்கின்றனர்.

எஸ்.சாலமன், எஸ்.ஞான சேகர், எஸ்.வினோத்குமார், ஜெ.மாலதி, எ.ஆதம், கே.ரவிச் சந்திரன், பா.பொன்னுரங்கம், டி.சங்கர், து.பார்த்தசாரதி, வி.மைக்கல் ஜெபராஜ், ஜெஸ் டின்பிரபு, டி.முகேஷ், ஜா.டைட்சன், ஜி.பிரதாப், ர. சந்தானகிருஷ்ணன், கே.கிருஷ் ணகுமார், எம்.டி.மோனிஷா, எஸ்.கோபிநாத் ஆகியோர் வர வேற்கின்றனர்.

இம்மாபெரும் புகழரங்க த்தில், திராவிடர் கழக பிரச்சார குழு செயலாளர்வழக்கறிஞர் அ. அருள்மொழி, பெரியார் எழுத்தாளர் திரு.வே.மதிமா றன், ஊடகவியலாளர் திரு. இந்திரகுமார் தேரடி, முனை வர் மஞ்சுளா ஆகியோர் சிறப் புரையாற்றுகின்றனர்.

மேலும், இப்புகழரங்கத்தில் வணக்கத்திற்குரிய மேயர் பிரியா ராஜன், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, சன்.முனியாண்டி. மாநில நிர்வாகிகள்: ப.ரங்கநா தன், கே.எஸ்.இரவிச்சந்திரன், கே.சந்துரு, சங்கரிநாராயணன், தமிழன்பிரசன்னா, எஸ்.மணி முடி, வே.உமாகாந்த், கே.எஸ். எம்.நாதன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, பரிதிஇளம்சுருதி, ஆர்.வரதன். கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.மகாதேவன், புனிதவதி எத் திராசன்MC, இசட். ஆசாத் MC, மண்டல குழு தலைவர்கள்: கூ.பீ.ஜெயின்MC, சரிதாமகேஷ் குமார் MC, ஸ்ரீராமுலு எம்.சி பகுதி கழக செயலாளர்கள்: வே.வாசு, ஐ.சி.எப்.வ.முரளி தரன், எ.நாகராசன்MC, செ. வேலு எம்.சி, வி.சுதாகர், எம். சாமிகண்ணு, செ.தமிழ்வேந் தன், எஸ்.இராஜசேகர், எஸ். முரளி, பொதுக்குழு உறுப்பி னர்கள்: கோ.மணி, எஸ்.பன் னீர்செல்வம், டி.வி.செம் மொழி MC, பி.ஜெ.துளசிங்கம், பி.உதயசங்கர், சாவித்திரிவீரரா கவன், எம்.இப்ராஹிம் கனி, அ.நிர்மலாதேவி, இரா.கலைச் செல்வி, மாவட்ட பிற அணிக ளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்: டி.லோ கேஷ், பா.ஜெகதீஷ், க. வினோத், ஜி.ஜெ.பிரபு, எஸ். தனசேகர், ஆர்.டி.சங்கர்நானா, வானவில்விஜய், சுதாதீன தயா ளன் MC, ராஜேஸ்வரிஸ்ரீதர் MC, நா.துலுக்காணம், வி.தாமோத ரன், துரைகண்ணன், எம். பெரோஸ்கான், பி.விஜய குமார், எம்.விநாயகம், ஆர். எஸ்.சித்திக், க.பா.பிரதீப் குமார், ம.அசோக்குமார், எல். சம்பத்குமார், கா.ராஜ்முகமது, அம்பத்தூர் தொகுதி மாமன்ற உறுப்பினர்கள்: க.பொற்கொடி MC, எம்.இ.சேகர் MC, எஸ். உமா MC ,உஷாநாகராஜ் MC, அம்பத்தூர் வடக்கு தெற்கு கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள்: அ.செல்வம், க.முரளிபாபு, க. கதிஜா, மா.ரமேஷ், மு.நடரா ஜன், து.செல்வராஜ், ஆர்.கதிர வன், எஸ்.கவிதா,

செல்லதுரை, கு.சங்கர், து.ஜெகநாதன், பி.ஆர்.இளங் கோவன், பா.பொற்செழியன், ரா.லட்சுமிரங்க சாமி, மேனாம் பேடுஇ.ராமு. அம்பத்தூர் வடக்கு தெற்கு கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: த.கண்ணபிரான், பு.வீரா, மு. இரகு, வெ.ராதாகிருஷ்ணன், த . பி ர கா ஷ் கு மா ர் , சி.சீனிவாசன், நா.நெப்போலி யன், இரா.டீக்கா, மு.சண்மு கம், ஆ.சுந்தர்ராஜ், சீ.லோகநா தன், சு.மோகன்குமார், மு.விஜ யகுமார், த.வ.லால், அம்பத் தூர் வடக்கு தெற்கு கிழக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள்: பொன்.நவராஜ்ரவி, எம்.குண சேகரன், ப.மதி, ஆ.இரா. அருண், க.ஜீவா, எஸ்.பி.அரிகி ருஷ்ணன், மா.குப்புசாமி, எம். ஹரிகிருஷ்ணன், எம்.முருகா னந்தம், பொ.சேதுராமன்(எ) பொன்சேட்டு, ஏ.கே.டி.பாஸ் கர், ஆர்.ஜெயராமன், சோ.மதி யழகன், எஸ்.எஸ்.சவரிமுத்து, பா.மாறன், டி.சுரேஷ்பாபு, எஸ்.கே.சதீஷ்குமார், ஏ.வி.தட் சிணாமூர்த்தி, கே.செல்வம், கோ.முத்துகுமாரசாமி, கோ. ராஜ்குமார், ந.குமரவடிவேல், ச.கோதண்டன், கோ.இன்பசே கரன், இ.நடராஜன், ஆர்.விம லன், ஜெ.ஐயப்பன், எஸ்.பரம சிவம். மாவட்ட பிற அணிகளின் துணை அமைப்பா ளர்கள்: பக்கீர்மொய்தீன், டாக்டர்.வி.சுதர்சன், ஆர்.எம். இளங்கோ, எஸ்.சிவசண்முகம், ஆ.பிரகாஷ், ச.கோவிந்த், இரா.பாலசுந்தர், கு.வேணு கோபால், துரைகணேஷ், கே.பிரகாசம், ரா.மகேஷ்வரி, ஸ்னோபகிருஷ்ணமூர்த்தி, ஆசைஆரோக்கியம், தில் மகேஷ், அசோக் ஆண்ரூஸ், என்.மோகன், எம்.பாலகிருஷ் ணன்(எ)அண்ணாதுரை டாக் டர்.பூபாலன், சா.ஜெகநாதன், டி.ஸ்ரீதரன், வி.இராமு, இரா. பாலமுருகன், எம்.இ.எஸ்.சந் தோஷ்குமார், மு.க.அ. ரியாஸ் முகமது, யு.இலக்கியா, எஸ். ஜெயபாலன், பி.பாலாஜி, என். மோகன், கே.அன்பரசு, என். ஸ்ரீதரன்,

ஆர்.பிரேம்குமார், எஸ்.பிர வீன்குமார், ஆ.நாதன், வி. மகேஷ்பாபு, பி.ஜெய பிர காஷ், ஏ.என்.ஆர்.செந்தில்கு மார், எஸ்.அன்புச்செல்வன், எஸ்.பாண்டியன், ஜி.மெல் வின்ஜோதி, எம்.எஸ்.ரமேஷ், கே.எஸ்.வரதராஜன், சி.லதா, ஏ.கே.பி.கிருஷ்ணன், வி.மில் லன், சா.மோகன்ராஜ், க.சத்தி யநாராயணன், எம்.இ.சந்தீப், எல்.ஜெய்லான்ஸ், சுந்தர்ரா ஜன், கே.மகேஷ், கே.எம். ஷாம்சுந்தர், டி.பாலமுருகன், ஆர்.ஜானகிராமன், ஆர்.ஜெய பிரகாஷ், எ.விஜய் எஸ்.விஜய குமார், ஏ.அன்சார், அம்பு ரோஸ் டாக்டர்.வி.ஜி.சந் தோஷ், விஜய் அமர்நாத் த.சுரேஷ்குமார் அ.செல்வராஜ் கோ.சங்கரி. வி.வசந்தி மல்லிகா ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.

பகுதி பிரதிநிதிகள் டி.சங் கர், து.பார்த்தசாரதி நன்றி கூறுகிறார்கள்.

சைதை மேற்கு: மாவட்டப் பிரதிநிதி – மறைந்த

கிண்டி ஆர்.எல்.செல்வம் திருவுருவப்படம்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறக்கிறார்!

ஆர்.எஸ். பாரதி – அமைச்சர்கள் க.பொன்முடி – எ.வ.வேலு – கே.ஆர்.பெரியகருப்பன் – கீதாஜீவன் – முன்னணியினர் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 4-

சைதை மேற்கு மாவட்ட பிரதிநிதி மறைந்த கிண்டி ஆர். எல்.செல்வம் நினைவேந்தல் நிகழ்வில் அமைச்சர் மா.சுப்பி ரமணியன் திருவுருவப் படத்தை திறந்து வைத்து மலர் அஞ்சலி செலுத்துகிறார். ஆர். எஸ்.பாரதி, அமைச்சர்கள் க.பொன்முடி, எ.வ.வேலு, கே.ஆர்.பெரியகருப்பன், கீதா ஜீவன், தமிழச்சி தங்கபாண்டி யன் எம்.பி., சட்டமன்ற உறுப் பினர்கள் ப.தாயகம்கவி, மயிலை த.வேலு, ஜே.கருணா நிதி, எஸ்.ஆர்.ராஜா பங்கேற் கின்றனர்.

சென்னை தெற்கு மாவட் டம் - சைதை மேற்கு பகுதி மாவட்ட பிரதிநிதி காலஞ் சென்ற கிண்டி ஆர்.எல்.செல் வம் அவர்களின் நினைவேந்தல் மற்றும் படத்திறப்பு நிகழ்வு சைதாப்பேட்டை பாலாஜி தெருவில் 05.03.2025 (புதன்கி ழமை) மாலை 6 மணியளவில் சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண் டலக்குழு தலைவருமான எம். கிருஷ்ணமூர்த்தி தலைமையி லும், பெருநகர சென்னை மாந கராட்சி துணை மேயர் மு. மகேஷ்குமார், சைதை கிழக்கு பகுதி கழக செயலாளரும் பதி மூன்றாவது மண்டலகுழு தலைவருமான இரா.துரை ராஜ் ஆகியோர் முன்னிலையில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்து வம் மற்றும் மக்கள் நல்வாழ் வுத்துறை அமைச்சர் மா.சுப்பி ரமணியன் அண்ணாரின் திருவுருவப்படத்தை திறந்து வைத்து மலர் அஞ்சலி செலுத் துகிறார்.

மேலும் இந்நிகழ்வில் கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி, வனத்துறை அமைச்சர் க.பொன்முடி, பொதுப்பணித்துறை அமைச் சர் எ.வ.வேலு, கூட்டுறவுத்

துறை அமைச்சர் கே.ஆர்.பெரி யகருப்பன், சமூக நலத்துறை அமைச்சர் கீதாஜீவன், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமி ழச்சி தங்கபாண்டியன், அன்ப கம் கலை, பொங்கலூர் பழனி சாமி, ப.தாயகம்கவி எம். எல்.ஏ., மயிலை த.வேலு எம். எல்.ஏ., ஜெ.கருணாநிதி எம். எல்.ஏ., எஸ்.ஆர்.ராஜா, பூச்சி முருகன், கருணாகிட்டு, திரைப்பட இயக்குநர் ஆர். பாண்டியராஜன, திரைப்பட நடிகர் கு.ஞானசமந்தம், மாவட்ட அவைத்தலைவர் எஸ்.குணசேகரன், பொதுக் குழு உறுப்பினர்கள் வழக்கறி ஞர் எம்.ஸ்ரீதரன், சைதை மா.அன்பரசன், மின்னல் கந் தப்பன், பகுதி கழக நிர்வாகிகள் களக்காடிஎல்லப்பன், த.சம் பத், ஆர்.ரமேஷ், கவிதாகௌ தமன், வி.பி.ஜானகிராமன், கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை மாநில துணை செய லாளர் எம்.எஸ்.ஹரிபாபு, வட் டகழக செயலாளர்கள்எஸ். பி.கோதண்டம், எம்.நாகா, கை.மு.சேகர், ந.தமிழரசு, அ ட் கோ க ம ல நா த ன் , மாவட்ட அமைப்பாளர்கள் சைதை சாதிக், ஆர்.கிருஷ்ண குமார், நா.மணிகண்டன், அஞ் சல்ராமன், கோ.பாஸ்கரன் உள்ளிட்ட மாவட்ட பிரதிநிதி கள், அனைத்து அணிகளை சார்ந்த மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள்,வட்ட கழக நிர்வாகிகள், பகுதி துணை அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

இவ்வாறு 142வது (அ) வட்ட கழக பொருளாளரும், கிண்டி ஆர்.எல்.செல்வம் அவர் களின் சகோதரருமான ஆர். எல்.காந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்கு பகுதி 51வது வட்ட திமுக சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம். எல்.ஏ, ஆலோசனைபடி கழக கொடியேற்றி இனிப்பு மற்றும் நலஉதவிகள் சட்டமன்ற உறுப்பினர் ஐடீம்ஸ் இரா.மூர்த்தி வழங்கினார்.வட்ட செயலாளர் க.கோவிந்தராஜ் தலைமை வகித்தார்.பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார் முன்னிலை வகித்தார்.உடன் எஸ்.குமார், பி.எஸ்.நாராயணன், இரா. முருகன், என்.பாரி, டி.நந்தகுமார், கே.கோபால், ஜி.அருண்குமார், ஆர்.ராஜ்குமார், எம்.சண்முகம், வி.சரவணன், எஸ்.மாரியப்பன், கே.கோபால், எம்.வல்லவராஜ், எஸ்.ஜேம்ஸ், வி.குமார், எச்.பழனிராஜ், பி.ஏழுமலை, எஸ்.சம்பத், ஏ.சந்திரசேகர், வி.செல்லபாண்டி, ஆலாலசுந்தரம், மற்றும் பலர் பங்கேற்றனர்.ஜி.உமாபதி நன்றி கூறினார்.